செ.வெ.எண்.317 நாள்.15.05.2018

**திருநெல்வேலியில் கலைபண்பாட்டு மையத்தின் மூலம் நடத்தப்பட்ட ஓவியம் மற்றும் சிற்பக்கலை கண்காட்சியில் சிறந்த கலைஞர்களுக்கு சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

திருநெல்வேலி, பாளையங்கோட்டை கலை பண்பாட்டு வளாகத்தில் மண்டல கலைபண்பாட்டு மையத்தின் மூலம் மண்டல அளவிலான ஓவியம் மற்றும் சிற்ப கலை கண்காட்சி நிறைவு விழா இன்று (15.05.2018) நடைபெற்றது. இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, ஓவியம் மற்றும் சிற்பக்கலை கண்காட்சியினை பார்வையிட்டார். மேலும், சிறந்த ஓவியம் மற்றும் சிற்பக் கலைஞர்களுக்கு சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசுகளைவழங்கினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலியில் கலை பண்பாட்டுத் துறையின் மூலம் மண்டல அளவிலான ஓவியம் மற்றும் சிற்பக்கலை கண்காட்சி சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. சிறந்த ஓவிய மற்றும் சிற்பக்கலைஞர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். முதல் முறையாக பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளும் கலந்து கொண்டனர். இதுபோன்ற கண்காட்சிகள் நடத்துவதன் மூலம் மாணவ, மாணவியர்கள் புதிய பல்வேறு நுணுக்கங்களை கற்றுக் கொள்ள வாய்ப்பாக அமைகிறது. இதுபோன்ற கண்காட்சி ஒவ்வொரு ஆண்டும் நடத்திடவும், மேலும், அதிக நாட்கள் நடத்தும் வகையிலும் நடவடிக்கை எடுக்கப்படும். இதுபோன்ற கண்காட்சியின் போது ஆர்வமுள்ள மாணவ, மாணவிகளுக்கு சிறிய பயிற்சிகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இக்கண்காட்சியில் பங்கேற்று திறமைகளை வெளிப்படுத்திய அனைவருக்கும் பாராட்டுகள் மற்றும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர்அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மண்டல கலைபண்பாட்டு மைய உதவி இயக்குநர் திரு.சுந்தர், ஔவை நுண்கலை கல்லூரி முதல்வர் திரு.சந்துரு, திருநெல்வேலி அருங்காட்சியக காப்பாட்சியர் திருமதி.சத்யவதி, சிற்பி அருணாச்சலம், இசைப்பள்ளி தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.